**செய்தி வெளியீடு எண்.762** **நாள்.16.09.2008**

## பேரறிஞர்அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி அவரது உருவம் பொறித்த நாணயங்கள் வெளியிடப்படும்!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மத்திய நிதியமைச்சர் திரு.ப. சிதம்பரம் கடிதம்.

பேரறிஞர்அண்ணா அவர்களின் நூற்றாண்டு 2008 செப்டம்பர் 15 முதல் தொடங்குவதையொட்டி தமிழ் மொழி, இலக்கியங்கள் மேம்பாட்டிற்காகவும், தமிழகத்தில் வாழும் ஏழை எளிய நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காகவும் அவர் ஆற்றிய அளப்பரிய தொண்டுகளைப் போற்றும் வகையில் ஓராண்டு முழுவதும் விழா கொண்டாடிட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. மிகச் சிறந்த ஜனநாயகவாதி, அறிஞர், சமூக சீர்திருத்தவாதி, மக்களின் மகத்தான தலைவர், ஏழைகளின் நண்பன் என்று பன்முகப் பெருமைகள் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில் அவரது திருவுருவம் பொறித்த நாணயங்கள் வெளியிட வேண்டுமென மத்திய நிதியமைச்சர் திரு.ப. சிதம்பரம் அவர்களுக்கு 28.8.2008 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்கள்.

அது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென 2.9.2008 அன்று பதில் எழுதியிருந்த மத்திய நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் 14.9.2008 அன்று எழுதிய கடிதத்தில் 15.9.2008 அன்று தொடங்கும் பேரறிஞர்அண்ணா அவர்களின் நூற்றாண்டு நினைவாக மத்திய அரசு அவரது திருவுருவம் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட முடிவு செய்துள்ளது என்றும், நாணயங்களை வெளியிடுவது தொடர்பாக தமிழக அரசின் ஆலோசனைகளுடன் முடிவு செய்யப்படும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு தெரிவித்துள்ளார். இந்த விவரம் கிடைத்ததும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மத்திய நிதியமைச்சர் திரு.ப. சிதம்பரம் அவர்களுக்கு நன்றி கூறியுள்ளார்.

‘’’

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.